REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

நிலக்கொடை இயக்கம் பொது உடமையினர் ஆதரவு

மைசூர், செப். 25—

கிராமக்கொடை இயக்கம் பற்றி எல்லாக் கட்சித் தலைவர்களும் கூடிப் பேசியுள்ளனர்.

இந்த மாநாட்டில் கலந்துகொண்ட கேரள முதலமைச்சர் பேசுகையில் 'நிலப் பிரச்சினை, கிராமப் புனரமைப்பு ஆகியவைகளைப் பற்றி பொது உடமையினர் கொண்டுள்ள கொள்கைக்கு இந்த இயக்கம் ஒரு மாற்றாகும். இப்படிப் பல்வேறு கொள்கைகள் இருப்பது நல்லது என்று தெரிவித்துள்ளார்.

மலர் 5] சென்னை: புரட்டாசி 10உ வியாழன் (26—9—57) ★ ★ வெளியீடு: புரட்டாசி 11உ வெள்ளி (27—9—57) [இதழ் 89

அந்த நாள் இந்தியைத் திணித்த ஆச்சாரியார் இன்று இந்தி எதிர்ப்பு முன்னணியில்

வழி தவறும் கோவலர்கள் இந்நாளில் இல்லை'

தாய்மொழி காக்க தாய்மார் தான் முன் நிற்க வேண்டும்

இந்தி எதிர்ப்பு மாநாட்டில் அண்ணா முழக்கம்

இந்தி எதிர்ப்பில், தாய்மார்கள்தான் முன்னணியில் நிற்க வேண்டும் என்று வேண்டினார், அண்ணா.

1937-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போரின், வரலாற்றினைச் சுருக்கமாக விளக்கிய அண்ணா அவர்கள், அன்று நம்மை எதிர்த்தவர் ஆச்சாரியார்; ஆனால் இன்று நாம் எதிர்க்க வேண்டியவர்கள், அவரை விடத் திறமைசாலிகள் அல்ல என்பதையும் சுட்டிக்காட்டினார். அண்ணா அவர்கள் திருவண்ணாமலை இந்தி எதிர்ப்பு மாநாட்டில் ஆற்றிய உரையின் முதல் பகுதி நேற்றைய இதழில் தரப்பட்டது; பிற்பகுதி கீழே தரப்படுகிறது :—

"சிலப்பதிகாரக் காலத்திலாவது, கண்ணகி அளிக்க முடியாத சுகத்தை மாதவி அளித்தாள் என்பதற்காக வழிதவறிய ஒரு வணிகன் மாதவி இல்லத்துக்குச் சென்றான். இங்கு வழிதவறிய கோவலர்கள் இல்லை; வழிதவறவேண்டுமென்று நினைக்கின்றவர்களும், நீ கட்டிய மனைவி அழகாகத்தானிருக்கின்றாள்; நான் கொண்டு வருபவள் குணத்திலேயும் குடிகேடி; பார்ப்பதற்கு அருவருப்பாகத்தானிருப்பாள், இருந்தாலும் எத்தனை நாளைக்குத்தான் அந்தக் கட்டழகியோடு நீ இருப்பது ? அவளைப் பின் அறையிலே தள்ளிவிடு; இவளை நீ முன்கட்டிலே வைத்துக்கொள் என்று கேட்கிறார்கள் என்றால், நாம்கூடச் சும்மாயிருக்கலாம், இங்கே கூடியிருக்கின்ற ஆயிரக்கணக்கான தாய்மார்கள் ஆர்த்தெழவேண்டும்.

"தமிழ்மொழிக்கு வந்துற்ற இழுக்கைத் தடுப்பதற்கு—போக்குவதற்கு 1937-ல் தமிழர் பெரும்படை கிளம்பிய நேரத்தில் தாய்மார்கள்தான் அதற்கேற்ற உறுதுணையாக இருந்தார்கள். காலையிலே ஒரு வரலாற்று உண்மையை அருணகிரி அடிகள் எடுத்துச் சொன்னார். பெரியாருக்குப் 'பெரியார்' என்ற சிறப்புப் பட்டப் பெயரை அளித்தவர்களே தாய்மார்கள்தான் என்பதை எடுத்துச் சொன்னார்கள்."

"அந்த நாட்களை யெல்லாம் எண்ணிப்பார்த்தால்..! அந்த நாட்களிலே இந்தியை ஒழித்துவிட்டோம் என்று நாங்களெல்லாம் இறுமாந்து இருந்தோம்; 20 ஆண்டுக் காலத்துக்குப் பிறகு, மறுபடியும் அந்த இந்தி ஆதிக்கப் பயம் நாட்டு மக்கள் உள்ளத்திலே புகுத்தப்படும் — மறுபடியும் இந்தியை எதிர்க்க வேண்டிய கட்டம் பிறக்கும்—மறுபடியும் அந்தப் பழைய சம்பவங்களெல்லாம் நடந்து தீரவேண்டும்—மறுபடியும் நானும் அருணகிரி அடிகளும் சிறைச்சாலைக்குச் செல்லவேண்டும்—மறுபடியும் தமிழகத்திலே பல்லாயிரக் கணக்கானவர்கள் அறப்போரிலே ஈடுபடவேண்டும்—என்று நாங்கள் அந்த நாட்களிலே எண்ணியதில்லை. ஏனென்றால், அன்றையத் தினம் போரைத் துவக்கிய நேரத்தில், எங்களை எதிர்த்தவரைவிட இன்றையத்தினம் எங்களை எதிர்க்கக் கூடியவர்கள் யாரும் திறமைசாலிகள் இல்லை என்பதை நான் தெளிவாக—திட்டமாக சொல்லுகிறேன்.

"அந்த நாளிலே எங்களை எதிர்த்தவர்கள் யார்? இந்தியத் துணைக்கண்டத்திலேயே, அரசியல் தந்திரத்தில் தன்னை மிகைத்தவர் யாருமில்லை என்றப் பட்டப் பெயர் பெற்ற ஆச்சாரியார் எங்களை எதிர்த்தார்.

"அம்மியும் குழவியும் ஆலாய்ப் பறந்த பொழுது, இலவம் பஞ்சுகள் இன்றையத் தினம் எங்களை அடக்கலாம் என்று கருதினால் உண்மையிலேயே அது நடக்கக்கூடிய காரியமல்ல. இந்தியைப் புகுத்துவதற்கு யாராவது ஒருவர் இந்தியத் துணைக் கண்டத்தில் துணிவோடு காரியம் செய்தாரென்றால், ஆச்சாரியார் ஒருவர்தான் செய்தார். கட்டாயமாக இந்தியைப் பள்ளிகளில் புகுத்துவேன் என்றார்; ஒரு புறத்திலே பெரியார் இராமசாமியும், மற்றொரு புறத்திலே பாரதியாரும் இன்னொரு புறத்திலே பன்னீர் செல்வமும், மற்றொரு புறத்திலே அருணகிரி அடிகளும் மற்றவர்களும், முழக்கம் செய்த நேரத்தில் 'யார் இந்த நாட்டை ஆளுகின்றவர்கள்? நானா, இராமசாமி நாயக்கரா, பார்த்துவிடுகிறேன்' என்றார். நான் அவருடைய வீரப்பிரதாபம் பலிக்காமல் போய்விட்டது என்று ஏச்சுக்குச் சொல்லுகிறேன் என்று கருதாதீர்கள். காலம் எந்த அளவுக்குக் கனிந்துள்ளது என்ற பேருண்மையை உங்களுக்குச் சொல்ல வேண்டுமானால், கட்டாய இந்தியைத் துணிவோடு புகுத்திய ஆச்சாரியார்தான் இன்றையத் தினம், 'கட்டாயமாக இந்தி நுழையக்கூடாது' என்று நாட்டிலே முழக்கம் செய்து வருகிறார். இந்தி எதிர்ப்பிலே அருணகிரி அடிகளைச் சிறைச்சாலைக்கு அனுப்பியவரும், என்னை சிறைச்சாலைக்கு அனுப்பியவரும், பெரியார் இராமசாமியை பெல்லாரி சிறைக்கு அனுப்பி, 'அது மிகவும் வெப்பமுள்ள இடமாயிற்றே, தள்ளாத வயதிலே அங்கு அனுப்பலாமா' என்று சட்டசபையிலே கேட்டால், 'உங்களுக்குப் பெரியாரைத் தெரியாது; எனக்குத் தெரியும். அவருடைய உடம்புக்கு வெயில் நல்லது' என்று வேடிக்கையாகப் பேசிய அதே ஆச்சாரியார் 'இந்தி நிச்சயமாகத் தடுக்கப்படவேண்டும்—இந்தி கட்டாய பாடமோ, இஷ்ட பாடமோ அது எந்த முறையிலே வந்தாலும் தடுக்கப்பட வேண்டும்—தமிழ் நாட்டுக்குத் தமிழ் மொழி போதும். மற்ற நாடுகளோடு தொடர்புகொள்வதற்கு ஆங்கிலம் இருந்தால் அது சாலச் சிறந்தது' என்று, தனி அறையிலேயல்ல—எங்களையெல்லாம் கூட்டிவைத்துத்தான் சென்ற ஆண்டு சொன்னார்.

"சென்ற ஆண்டு ஒரு நாள் திடீரென்று சுப்பையா பிள்ளை என்ற தமிழ் ஆர்வம் படைத்த ஒரு கண்ணியவான் என்னை வந்து பார்த்தார். அவரிடத்திலே நான் பேசுகிற நேரத்திலே, என்னிடத்திலே அவர் சொன்னார், 'இந்தியை மறுபடியும் புகுத்தலாமா என்பதற்காக கேர் கமிட்டி விசாரணை நடத்துகின்றது. இந்த நேரத்திலே நாம் ஏதாவது செய்ய வேண்டுமே' என்று. தமிழ் நாட்டிலே புதிதாக அதற்குள்ளே உருவாகிவிட்ட விசித்திரமான அரசியல் நிலைமை காரணமாக நான் அவரிடத்திலே சொன்னேன்; 'ஐயா! நான் ஏதாவது செய்தால், நான் செய்கிறேன் என்பதற்காகவே அது வேண்டாமென்றுசொல்லுகின்ற ஒரு மாபெரும் தலைவர் தமிழகத்திலே இருக்கிறார். ஆகையினாலே என்னை முதலில் ஏதும் செய்யச் சொல்லாதீர்கள். அவரைப் போய்ச் செய்யச் சொல்லுங்கள்; அவர் செய்கின்ற காரியத்தை நான் அடுத்துச் செய்கின்றேன்' என்று. 'நீ யாரைக் குறிப்பிடுகிறாய் என்று எனக்குத் தெரிகின்றது. ஆனால், அவரைக் கேட்டுவிட்டுத்தான் உன்னிடத்திலே நான் வந்து சொல்லுகின்றேன்; ஆச்சாரியாருடைய இல்லத்தில் பல கட்சித் தலைவர்களை வரவழைத்து இந்தி ஆதிக்கத்தைத் தடுப்பதற்காக நாமெல்லாம் கலந்து பேசலாம், வரவேண்டும்' என்று அவர்கள் அழைத்தார்கள்.

"அந்த நேரத்திலே திராவிடர் கழகத்திலே ஒரு தீர்மானம்—'தீண்டினால் திருநீலகண்டம்' என்று திருநீலகண்ட நாயனார் போட்ட தீர்மானம்போல—நாங்கள் வந்தால் அவர்கள் வரக்கூடாது. அவர்கள் இருக்கிற இடத்திற்கு நாங்கள் போனால், அவர்கள் கலைந்துபோய்விட வேண்டும்—இப்படி ஒரு தீர்மானம் போட்டு வைத்திருந்தார்கள். அரசியலிலே ஒரு புதிய தீண்டாமை ஜாதியைச் சிருஷ்டித்தார்கள்.

"அதை நான் சுப்பையா அவர்களுக்குக் கவனப்படுத்தி, 'இப்படி இருக்கிறதே' என்றேன்; 'இல்லை பெரியாரிடத்திலே கலந்துபேசினேன். 'வரச் சொல்லுங்கள்—வரச் சொல்லுங்கள்' என்று சொன்னார், ஆகையினாலே நீங்கள் வரலாம்' என்றார்.

"அந்த நேரத்திலே நானும் பல நண்பர்களும் சென்றோம். இந்தியை அவசரப்பட்டு இங்கே திணிக்கக்கூடாது என்றும், உண்மையிலேயே தமிழ் மொழி தமிழ்நாட்டுக்குப் போதுமென்றும் பிற நாடுகளோடு தொடர்புகொள்வதற்கு ஆங்கிலம் இருந்தால் போதுமென்றும் அன்றையத்தினம்

(4-ம் பக்கம் பார்க்க)

துப்பாக்கிப் பிரயோகங்கள் பற்றி நீதிபூர்வ விசாரணை

நடத்த முடியாது என்கின்றனர் மந்திரிகள்

இராமநாதபுரம் மாவட்டத்தில், அண்மையில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோக சம்பவங்கள் பற்றியும், கலகங்கள் பற்றியும் நீதிமன்ற விசாரணை எதுவும் நடத்தப்படமாட்டாதாம்.

இரு நாட்களாக, கலகம் நடைபெற்ற பிரதேசங்களில் சுற்றுப் பயணம் செய்து மதுரை திரும்பிய மந்திரிகள் சுப்பிரமணியமும் பக்தவத்சலமும், இந்தத் தகவலை தந்திருக்கின்றனர்.

இப்போதுள்ள நெருக்கடி நிலை நீடிக்கும்வரையில் அந்தப் பிரதேசத்திலிருந்து போலீஸ் படையைத் திருப்பி அனுப்புவதற்கில்லை என்றும் அவர்கள் கூறியிருக்கின்றனர்.

சம்பவங்களின்போது, பல வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டு, ஏராளமான சொத்து நஷ்டமடைந்திருப்பதாகவும் அவர்கள் கூறினர்.

கிராம மக்களுக்கு, உணவுப் பொருள்கள் வழங்குமாறு உத்தரவிட்டிருப்பதுடன், வீடிழந்தவர்கள் எவராயினும் அவர்களுக்கு ரூ. 30 நஷ்டஈடு வழங்க உத்தரவிடப்பட்டிருக்கிறது என்றும் மந்திரிகள் கூறினர்.

நாகர்களுக்கென தனி மாநிலம்

டெல்லி சர்க்கார் சம்மதம்

சுதந்தரம்கோரும் பிசோவின் நிலை தெரியவில்லை

அசாம் மாநிலத்திலிருக்கும் நாகமலை மாவட்டத்தையும், டெல்லியின் நேரடி ஆட்சியிலிருக்கும் துயென்சாங் எல்லைப் பிரிவையும் ஒன்றாக இணைத்து இந்திய யூனியனுக்குட்பட்ட ஒரே நிர்வாக உறுப்பாக்கி குடியரசுத் தலைவரின் நேரடி ஆட்சிக்குட்படுத்துவது என்று ஒரு புதிய யோசனையை பண்டித நேரு ஏற்றுக்கொண்டிருக்கிறாராம்.

நாகர் தலைவர்களும், பண்டிதரும் கூடிப்பேசி, இந்த முடிவுக்கு வந்தனர் என்று தெரிய வருகிறது.

நவம்பரில் மக்கள்சபை கூடும்போது, இந்த முடிவுக்கு ஒப்ப நாகருக்கு தனி மாநிலம் தரும் இந்த ஏற்பாட்டிற்கு சட்டம் வரும் என்றும் அதற்காக, அரசியல் சட்டத்தின் ஆறாவது ஷெட்யூல் திருத்தப்படும் என்றும், கூறப்படுகிறது. இதுவரை நாகர்கள் இழைத்துள்ள குற்றங்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படும் என்றும், இனிமேலும் நாகர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டால் அதற்கு மன்னிப்பு வழங்கப்படாது என்றும் பண்டிதர் கூறியுள்ளாராம்.

நாகர்களின் சார்பாக, கோகிமா மாநாட்டுத் தலைவரான டாக்டர் இம்காங்லிபா ஆவ் என்பார் தலைமையில் தூதுக் குழு ஒன்று, பண்டிதருடன் பேச்சுவார்த்தை நடத்தியது என்று தெரிகிறது. இந்தத் தூதுக் குழுவினர்தான் அண்மையில் நாக மக்கள் மாநாடு என்று ஒரு மாநாட்டைக் கூட்டி, நாகருக்கு என ஒரு தனி மாநிலம் வேண்டும் எனக் குரல் கொடுத்தவர்கள்.

இந்த தனி மாநில ஏற்பாட்டினை, தீவிரவாதிகளாயிருக்கும் பிசோவும் அவரது சகாக்களும், ஏற்றுக்கொள்வார்களா என்பது தெரியவில்லை.

பிரதேசத்தில் உள்ள நாகர்கள் அனைவரும் ஒரே, நிர்வாக அமைப்பின் கீழ் கொண்டுவரப்படுகின்றனர் என்றாலும், அசாம் மாநிலமும் அந்த உறுப்புடன் தொடர்பு கொண்டிருக்குமாம், அதாவது அசாம் கவர்னர், குடியரசுத் தலைவருக்காக, நாக மாநிலத்தையும், ஆளுவாராம்.

நம் நாடு

சென்னை 26—9—57 வியாழன்

அவர்கள் யாரோ? நாம் யாரோ?

ஏகாதிபத்திய வாதிகளுக்கு உரியன என்று இதுவரையில் உலகில் அடையாளங் காணப்பட்டிருக்கும் குணக்குறிகள் அத்தனையும் மாறாக் குன்றாமல் தங்களிடத்தில் பொதிந்து கிடக்கின்றன என்பதை, டெல்லிப் பெரியவர்கள், தென்னாட்டைப் பொறுத்த ஒவ்வொரு விவகாரங்களிலும் கடைப்பிடித்துவரும் வஞ்சகப்போக்குகள் மூலம் நாணக்கேடு எதுவுமின்றி பறைசாற்றிக் கொண்டிருக்கின்றனர்.

டெல்லிப் பெரியவர்கள், தென்னாட்டு மக்களை, தங்களின் ஆதிக்கத்திற்குட்பட்டுக் கிடக்கும் அடிமைகள் என்ற நிலையில் 'அவர்கள் யாரோ, நாம் யாரோ' என்று கருதி நடந்துகொண்டு வருகின்றனர் என்பதற்குச் சான்று பகர, இனிமேலும் புதிதாக சம்பவங்கள் நிகழ வேண்டியதில்லை; நிகழ்ந்துள்ளன அனந்தம். ஆனாலும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன, அத்தகு சம்பவங்கள் நாள் தவறாமல். என்றாலும் இந்த உண்மையைப் பொய்யென்று நிரூபித்துவிடும் முயற்சியில் ஈடுபட்டு, தோல்வியைப் பரிசாகப் பெறும், அரசியல்வாதிகள், எண்ணிக்கையில் குறைந்து வருகிறார்கள் என்றாலும், அவர்கள் இன்னும் தெளிவு பெறவில்லை. தூங்குகிறவர்களை எழுப்பலாம்! ஆனால் தூங்குவதுபோல பாவனை செய்பவர்களை எழுப்பமுடியாது. வாதத்திற்கு தமிழ் நாட்டில் மருந்துண்டு, ஆனால் பிடிவாதத்திற்கு மருந்து ஏது? அதுபோல உணராதவர்களுக்கு ஏன், உணர இயலாதவர்களுக்குக்கூட, உண்மைகளை உணர்த்தலாம். ஆனால் உணர மறுப்பவர்களை என் செய்வது? பிடிவாதமாக, வடநாட்டுப் பெரியவர்களின் ஏகாதிபத்தியப் போக்கினை உணர மறுக்கிற கண்ணியவான்களுக்கு மேலும் ஒரு நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

தென்னாட்டில் குறிப்பாகத் தமிழ் நாட்டில், உணவுப் பற்றாக்குறை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. கிடைக்கிற பொருள்களும், ஏழைக்கு எட்டாத விலை உயர்வில் நிற்கின்றன. நியாய விலைக்கடைகள், உணவு மண்டலம், நோய்க்கு மருந்தென்றனர். கடைகள் திறக்கப்பட்டன. மண்டலம் உருவாயிற்று.

உருவான உணவுமண்டலம், இதுவரை உருப்படியான பலனை, எதிர்பார்த்தபலனைத்தரவில்லை. இதனை, மண்டலத்தின் பிதாக்கள் ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

கடைகள் திறந்திருக்கின்றன. ஆனால் அவற்றில் அரிசி, மக்களின் தேவைக்கொப்பக் கிடைக்கவில்லை. இந்த அரை குறை விநியோகத்திற்குக்கூட எங்களிடம் அரிசி கேட்காதீர் என்று டெல்லி தேவன் அருள் பாலித்தார், மாநில அரசுக்கு. கதறி அழுது, 'அரிசி தராவிடின் எப்படி? நாங்கள் பெயரளவில் நடத்திவரும் நியாய விலைக் கடைகளையும் மூடிவிட்டால், ஏதோ செய்தோம் என்று சொல்லிக்கொள்ள எதுவும் இல்லாமற்போய்விடுமே?' என்றனர், தமிழ் மாநில மந்திரிகள். அப்படியா! போனால் போகிறது. கடனாகத் தருகிறேன், அரிசி; ஆனால் விலை முன்புபோல மணங்கு பதினைந்து ரூபாய் அல்ல. இருபது ரூபாய் இப்போது; மேலும் கடனை, அடுத்த மகசூலில் தந்துவிட வேண்டும். தெரிகிறதா? சம்மதமா? கேட்டது டெல்லி. சம்மதம் தெரிவித்திருக்கின்றனர், தமிழ்நாட்டு சர்க்கார்.

ஆனால், தமிழ் நாட்டிற்குக் கடனாக, அதிக விலையிட்டு அரிசி தர, கடாட்சம் புரிந்திருக்கும், இந்த டெல்லி தேவதைகள், வங்காள மாநிலத்தைப் பொறுத்து எப்படி நடந்து கொண்டிருக்கிறார்கள்?

'எழுபத்து ஏழு லட்சம் உணவுப் பங்கீட்டுச் சீட்டுகள் ஏற்கனவே தரப்பட்டுவிட்டன. இன்னும் இருபத்து மூன்று லட்சம் சீட்டுகள் வழங்கத் திட்டமிட்டிருக்கிறோம். சீட்டுடையோருக்கு, நியாய விலைக் கடைகளில் உணவுப் பொருள்கள் வழங்கப்படும். மூன்று மாதங்களுக்குத் தேவையான அரிசியை, கிடங்குகளில் குவித்திருக்கிறோம். மேலும் 25 லட்சம் மக்களுக்கு, இலவசமாகவோ அல்லது ஒப்புக்கு வேலை செய்யச் சொல்லியோ, உணவு வழங்க மத்திய சர்க்கார் திட்டமிட்டிருக்கிறது — இது மேற்கு வங்கத்தில் உணவுப் பற்றாக்குறை பற்றி, அந்த மாநில உறுப்பினர்கள் மக்கள் சபையில் எடுத்துரைத்தபோது டெல்லி உணவு மந்திரி அஜித் பிரசாத் ஜெயின் என்பார் தந்த பதில்.

வங்க மக்களின் பசிக்குத்தான், 'தான் வந்திட பத்தும் பறந்துபோம்' என்ற சக்தி உண்டா? தமிழ் நாட்டு மக்களுக்கும் வயிறு இல்லையா? சோற்றுக்காகவே பிறவி எடுத்த பரந்தமனம் படைத்தோர், டெல்லியின் இந்த ஓரவஞ்சனைப் போக்கிற்கு, என்ன விளக்கம் தரப்போகிறார்களோ?

வங்கத்தில் பற்றாக்குறை என்றால், துடிக்கிறது டெல்லி; இலவசமாகக்கூட இருபத்தைந்து இலட்சம் மக்களுக்கு உணவு தரத் திட்டம் உண்டு, மூன்று மாதத் தேவைக்கான அரிசி கிடங்கில் குவிக்கிறோம் என அடுக்குகிறது நடவடிக்கைகளை. ஆனால், அதே டெல்லி, தமிழ் நாட்டில் பற்றாக்குறை என்றால், கடனாக வேண்டுமானால், அதுவும் அதிக விலை தருவதானால், அதிலும் திருப்பித் தந்துவிடுகிறோம் என உறுதிமொழி தந்தால், போனால் போகிறது என்று தருகிறேன் எனக் கூறுகிறது.

எங்கே ஏக இந்தியா? எங்கே பாரதமாதா? எங்கே எல்லோரும் இந்தியர்?

கேட்கிறது, பசிபால் குமுறும் தமிழனின் வயிறு. பொறுப்புடையவர்களானால் 'அகில இந்தியர்'கள் வேறு பதில் சொல்லட்டும். நாம் சொல்லுகிறோம், அவர்கள் யாரோ! நாம் யாரோ?

'அரசியல் நாகரிகப் பண்பு வளருமிடமாக நகர் மன்றங்கள் திகழ வேண்டும்'

திருவண்ணாமலை நகர் மன்ற வரவேற்பில் அண்ணா, நெடுஞ்செழியன் உரை

திருவண்ணாமலை, செப். 23—

வடாற்காடு தி. மு. கழக மாநாடுகளையொட்டி, இங்கருக்கு வருகைதந்த அண்ணா அவர்கட்கும், தி. மு. க. பொதுச்செயலாளர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கட்கும் திருவண்ணாமலை நகரமன்றம் வரவேற்பளித்துச் சிறப்பித்தது.

21—9—57 பிற்பகல் 2-30 மணிக்கு, நகராண்மைக் கழக உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத்தில் இவ்வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. நகரமன்ற உறுப்பினர் திரு. முருகேசன் தலைமைவகித்தார்.

திரு. ஐ. மாணிக்கவேலு அவர்கள், நகரமன்றச் சார்பில் அண்ணா அவர்களுக்கும், திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கட்கும் வரவேற்பிதழ்களை வாசித்தளித்தார்.

திரு. நெடுஞ்செழியன் அவர்கள் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், நகராட்சிமன்றங்களில் கட்சி மாற்சர்யங்களுக்கு இடமில்லை — இடமளிக்கக் கூடாது என்றார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"ஒரு ஜனநாயக நாட்டில், பாராளுமன்றத்திலும் சட்டமன்றங்களிலும் கட்சி மனப்பான்மை நிச்சயம் தேவை; ஆனால், மாவட்ட ஆட்சிமன்றங்களிலும், நகராட்சி — ஊராட்சிமன்றங்களிலும் கட்சி மாற்சர்யங்களுக்கு இடமிருக்கக்கூடாது.

"பாராளுமன்றமும், சட்டமன்றங்களும், கொள்கை அடிப்படையில் சட்டங்களை உருவாக்கக்கூடியவை; நகராட்சி—ஊராட்சிமன்றங்களோ அச்சட்டங்களை நடைமுறையில் நிறைவேற்றிவைக்க வேண்டியவையாகும்.

"சட்டமன்றங்களால் இயற்றப்படும் சட்டங்களை நிறைவேற்றி வைப்பதும், ஊருக்கு நல்ல ஒளி விளக்குகள் ஏற்படுத்துவதும், வசதியான பாதைகள், கழிவுநீர் ஓடைகள், கல்விக் கூடங்கள், தொழில் வசதிகள், மற்றும் சுகாதாரமருத்துவவசதிகள் ஏற்படுத்துவதுமே நகராட்சிமன்றங்களின் பணிகளாகும்.

"ஆட்சிப் பொறுப்பில் ஈடுபடுவதற்குரிய நல்ல பயிற்சிபெறுவதற்கான ஸ்தாபனங்களாக நகராட்சிமன்றங்கள் இயங்கவேண்டும்.

"ஊருக்குச் செய்யும் நல்ல காரியங்களை யார் செய்தாலும் அதைப் பாராட்டவேண்டும். கம்யூனிஸ்டுக் கட்சியினர் போட்ட சாலையென்றோ, சோஷலிஸ்டுகள் போட்ட சாலை என்றோ, காங்கிரஸ்காரர் அமைத்துத் தந்த ஒளி விளக்கு என்றோ, தி. மு. கழகத்தார் கட்டிய பாலம் என்றோ பிரித்துப் பேசவேண்டிய அவசியமில்லை. திறம்படப் பணியாற்றும் பண்பு உள்ளம்தான் நகரசபை உறுப்பினர்களுக்குத் தேவை.

"நல்ல செயலாற்றும் திறம் படைத்தவர்கள்—ஓய்வு நேரங்களில் ஆக்கவேலைகளில் ஈடுபடும் நல்லவர்கள் பணியாற்றும் இடம் தான் நகரமன்றம்.

"நல்ல உள்ளம்படைத்தவர்கள்—ஊருக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற எண்ணமுடையவர்கள்—பிறர் சொல்லும் நல்லவைகளைக் காதில் கேட்டு அவற்றைச் செயல்படுத்தும் நோக்கமுடையவர்கள்—எதையும் சிந்தித்துச் செயலாற்றக்கூடியவர்கள்தாம் நகரமன்றத்திற்குவேண்டும். கட்சிமாற்சர்யமற்றதுதான் நகரசபை. இதைத்தான் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

"அரசியல் கண்ணியம்—கடமை—நாகரிகப் பண்பை இழக்க இடமில்லாதவகையில், இவற்றின் நிலைக்களனாக அமைந்ததுதான் நகரமன்றமாகும். யார் யாரைக்கொண்டு எந்தெந்தவகையில் காரியமாற்றவேண்டுமோ, அவர்களை அந்தந்தவகையில் ஈடுபடுத்தும் 'முன்னோடும் பிள்ளை'களாக நகரமன்ற உறுப்பினர்கள் திகழவேண்டும். எதிர்க்கட்சிக்காரர்களாகிய எங்களை வரவேற்கும் இந்த நகரமன்றத்தின் நேர்மையைக்காண பூரிப்பும் பெருமையும் கொள்கிறேன். இம்மன்றத்தின் இந்த நற்பண்பு வாழ்க! இதன் தொண்டு வளர்க! முயற்சிகள் வெல்க!—என வாழ்த்துகிறேன்."

அடுத்து, அண்ணா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"குழந்தை பிறப்பதற்குமுன், பல சங்கடங்களும் சிக்கல்களும் ஏற்படுவதுண்டு. ஜனநாயக வளர்ச்சியில் பண்பாடுகள் வெற்றி பெறுமுன் சில சிக்கல்களும், சங்கடங்களும் ஏற்படுகின்றன.

ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும், அமைச்சர்களுக்கும் வரவேற்புக் கொடுத்து, அவர்கள் மூலம் நகரசபைக்குச் சில உதவிகளைப் பெறலாம் என்ற எண்ணங் கொண்டவர்கள் இருக்கிறார்கள். எதிர்க்கட்சியினரான அண்ணாத்துரைக்கும் நெடுஞ்செழியனுக்கும் வரவேற்புக் கொடுப்பதால் என்ன பலன் என்று அவர்கள் கருதுகிறார்கள். அவர்களெல்லாம், உபசாரத்தைக் கொடுத்து பதிலுக்கு நன்மையை எதிர்பார்ப்பவர்கள். எங்களுக்கு வரவேற்புக் கொடுக்க முன்வருபவர்களெல்லாம், இத்தகைய உபசாரங்கள் அளித்து எங்களின் பணிகளுக்கு உற்சாகமூட்டுகிறார்கள் என்றுதான் கருத வேண்டும்.

"இன்னும் 5 ஆண்டில் மந்திரியாக வருவேன்" என்றுகூறி பந்தயம் கட்ட முன்வருகிறவர்களையும் பார்க்கிறோம்; மந்திரிகளாகவும் ஆகிறார்கள். அந்த நிலைக்கு வந்துவிட்டது இன்றைய அமைச்சர் பதவி—அமைச்சர் பதவி இல்லாதவர்களுக்கு வரவேற்புக் கொடுக்க வேண்டியதில்லை என்று சிலர் கருதுவார்களேயானால், எதிர்க்கட்சியினர்கூட அமைச்சர்களாக வரக்கூடியவர்கள்தான் என்று எண்ணிப்பார்க்கும் யூகம் அவர்களுக்கு இல்லை என்றுதான் சொல்லுவேன். ஆளுங்கட்சிக்குத்தான் வரவேற்பு என்று இருக்குமானால், சிலநேரம் எங்களுக்குச் சந்தேகம்தோன்றுகிறது. எத்தனை நாளுக்குத்தான் இவர்கள் ஆட்சியில் நீடித்திருப்பார்கள் என்று.

ஆளுங்கட்சியிலே எத்தனைப் பேர் நீடித்திருப்பார்கள்? எங்களுக்குத் தெரியும். எத்தனைப்பேர் அன்றையத்தினம் கட்சி மாறியிருக்கிறார்கள் என்பதும், எத்தனைப்பேர் கட்சி மாறியதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டு மீண்டும் பிரிந்த இடத்தில் சேர முயல்கிறார்கள் என்பதும் எங்களுக்கு நன்றாகத் தெரியும். அரசியல் நாகரிகத்தைக் கருதி அத்தகையவர்கள் பட்டியலை இங்கு விவரிக்க நான் விரும்பவில்லை. ஒரு கட்சியிலிருப்பவர்களில் சிலர், தங்களுக்கு இலாபம் கிடைக்காத நேரத்தில்—தாங்கள் மேலும் நீடித்திருப்பது முதலுக்கு ஏற்றதல்ல என்றால் விலகிவிடுகிறார்கள். இப்படி, பல கட்சிகளின் பட்டியல்களையும் படித்துப் பார்க்கும் சந்தர்ப்பம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது.

நாங்கள் சில புதிய கருத்துக்களைப் பரப்புவதைவிட, ஊராட்சி மன்றத்தினராகிய நீங்கள் ஊருக்குச் செய்யும் பணிகள் நல்லமுறையிலே அமையவேண்டும். எங்கள் தத்துவங்களை நிறைவேற்றும் நல்ல சிற்பிகளாக நீங்கள் இருக்கிறீர்கள். நாங்கள் நாட்டின் நாலாபக்கங்களிலும் நல்ல எண்ணத்தைப் பரப்பிவருகிறோம்; அதைச் செயலுருவாக்கிவருகிறீர்கள்.

நீங்கள், நகரிலே நந்தவனங்களை அமைத்து, நகரை அழகுபடுத்திவரும் வேளையில், நாங்கள் பாலைவனங்கள்பற்றிப் பேசுகிறோம். தத்துவங்களைச் சொல்லும் அரசியல் வாதியைவிட நீங்கள் நல்ல சிற்பிகள் ஆவீர்கள்.

எந்தநேரத்திலும் உங்களுக்குத் துணை நிற்க நாங்கள் தயாராயிருக்கிறோம். நீங்களும் எங்கள் கருத்துக்களை அலட்சியமாகத் தள்ளிவிடமாட்டீர்கள் எனக் கருதுகிறேன்.

வந்தவர்களை வரவேற்கும் தமிழ்ப் பண்புடன், எங்களை வரவேற்பது பாபமல்ல என்ற துணிவுடன் முன்வந்தவர்களுக்கு எங்கள் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இறுதியாகத் தோழர் ப. உ. சண்முகம் நன்றிகூற விழா இனிது முடிவுற்றது.

அவர் யாரோ - நாம் யாரோ!

டில்லி கடன் தருகிறதாம்!

சென்னை, செப். 25—

சென்னை மாநிலத்தில் உள்ள நியாயவிலைக் கடைகளுக்கு மத்திய அரசாங்கம் அரிசி தராது என்று சமீபத்தில் அறிவித்திருந்தது தெரிந்ததே. மத்திய கிடங்குகளில் அரிசி சேமிப்பை அதிகரிக்கவும், வடநாட்டு மாநிலங்களுக்குத் தேவைப்படும் அரிசியைத் தருவதற்கும் முக்கிய நடவடிக்கையாக மத்திய உணவு அமைச்சர் அவை இந்த முடிவைச் செய்திருந்தது.

வடவருக்கு வெண்ணெயும், தென்னவருக்கு சுண்ணாம்பும் தருவதே ஏக இந்திய அதிபர்களின் நீதி என்பதை மாற்ற நிதி அமைச்சர் சுப்பிரமணியம் டில்லி சென்றிருந்தார்.

இதற்குப் பிறகு டில்லியின் முடிவு இதுதான் — திங்கள் தோறும் 4,000 டன் அரிசியைக் கடனாகத் தருவது.

கடனாகப் பெறும் இந்த அரிசியை அடுத்த ஆண்டு அறுவடையின்போது திருப்பித் தந்துவிட வேண்டுமாம்.

இப்போது தரப்படும் அரிசியின் விலையும் அதிகமாம்!

கேரளத்தில் ஒரு இந்தி மொழிக் கல்லூரியாம்

இந்தி பயில்வோர்க்கு ரொக்கப் பரிசாம்

திருவனந்தபுரம், செப். 23—

கேரள மாநிலத்தில், ஒரு இந்தி மொழிக் கல்லூரி நிறுவவேண்டுமென டெல்லி சர்க்கார், யோசனை (!) தெரிவித்துள்ளதாம்.

இந்த யோசனையை, கேரள இந்தி ஆலோசனைக் குழுவும் ஏற்றுக்கொண்டுவிட்டதாம்!

இந்தியைப் பரப்புவதற்கென பல வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதெனவும் இந்தக் குழு முடிவு செய்துள்ளதாம்.

சர்க்கார் ஊழியர்கள் இந்தி கற்றுக்கொள்ளுவதற்கு, ரொக்கப் பரிசுகள் அளிப்பதின் மூலம், ஊக்கம்தரவேண்டுமாம்.

இந்தி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்க வடநாட்டிலிருந்து பண்டிதர்களை அழைக்க வேண்டுமாம்,

இருமுறை புகுந்த இந்தியை விரட்டியடித்தோம்

மீண்டும் படையெடுக்கத் திட்டமாம்

ஆணவத்தை இடுப்பொடிக்க-தாயகத்தை மீட்டிட-போர்த்தழும்பேற்றிட வீரரே வாரீர்!

வட ஆற்காடு மாவட்ட தி. மு. கழக மாநாடுகளில் வ.கு. தலைவர் முல்லை-சத்தி வரவேற்புரை

21—9—57 சனி காலை திருவண்ணாமலையில், வடாற்காடு மாவட்ட தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டின்போது, வரவேற்புக் குழுத் தலைவர் தோழர் முல்லை-சத்தி அவர்கள் ஆற்றிய வரவேற்புரை :—

"அண்ணா அவர்களே! பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் அவர்களே! தாய்மொழி காக்க எழுந்துள்ள பெரும்படையினரே! உங்கள் அனைவரையும் இரு கரம் கூப்பி வணங்குகின்றேன்—வரவேற்கின்றேன்.

"கல் தோன்றி மண்தோன்றா காலத்துக்கு முன்தோன்றிய மூத்த குடியினின்றும், வாழையடி வாழையாய் வளர்ந்துவரும் சிங்கக் கூட்டத்தின் நிகரில்லா தங்கத் தமிழுக்கு மீண்டும் ஆபத்து என்ற சேதி அறிவிக்கப்பட்டுவிட்டது. தாய்மொழிக்கு ஆபத்தென்று கேட்டும் வாளாயிருந்தனர் வீரத் தமிழர் வழிவந்தோர் எனும் இழிமொழியைத் தாங்கித்திரியோம் என்று சூளுரைக்கும்முகத்தான் இங்கே கூடியுள்ளோம். நம்மால் முன்பு இருமுறை விரட்டியடிக்கப்பட்ட 'இந்தி' மீண்டும் ஆணவ நடைபோட்டு திராவிடத்தின் வாயிலில் நுழைய இருக்கிறதாம். ஆச்சாரியார் அழைத்துவந்தார்; விரட்டியடித்தோம்; மீண்டும் ஓமந்தூரார் அழைத்துவந்தார்; துரத்தியடித்தோம்; இன்று காமராசர் அழைத்துவருகிறார்...வந்தால்...நிச்சயம் எதிர்த்து அழிப்போம்! இதுவே இந்தியின் கடைசி படையெடுப்பாக இருக்க வேண்டும். அந்த அளவிற்கு அதன் முதுகெலும்பை முறித்தனுப்புவோம்.

"இந்தியை அரசியல் மொழியாகப் புகுத்தும் காலவரம்பையொட்டி எழுந்த சர்ச்சையால் இந்திய அரசாங்கம் அமைத்த 'இந்தி குழுவின் தீர்ப்பு' வெளியாகிவிட்டது. கால வரம்பை நிர்ணயிப்பதிலே அவர்களுக்குள் அபிப்பிராயபேதம் இருக்கிறது. இது களவாடப்புகும் கள்ளர்களுக்குள் களவாடப்படவேண்டிய நேரம் குறித்து எழும் சர்ச்சையைப் போன்றது; ஆனால் நாமோ காலவரம்பைத் தள்ளிப்போடும்படி வேண்டவில்லை. இந்தியைப் புகுத்துவதென்ற நஞ்சு நினைவையே கொன்றுவிடுங்கள் என்கிறோம்.

"இந்தியைக் கொண்டுவரும் வெறியர்களுக்கு சொல்லுகிறோம். எங்கள் உடலில் உயிர் ஊசலாடும்வரையில் உங்கள் ஆசை நிறைவேறாது. எத்தனைப் பட்டாளம் கூட்டி வந்தாலும் இந்தியை எங்கள் நாட்டில் பவனிவரவிட மாட்டோம். எங்கள் தியாகம் வீண்போனது கிடையாது. இதுவரை இந்தியை விரட்டியடிக்க நாம் கொடுத்த விலை சாதாரணமானதல்ல. என்றாலும், நாம் பெற்றுள்ள வெற்றியும் சாமான்யமானதல்ல! இந்தியை இழுத்துவந்த ஆணவக்காரர்களின் அரசியல் வாழ்வே இருண்டுவிட்டது. எனவே, அரசியலாரை எச்சரிக்கின்றோம் 'வேண்டாம் இந்த விபரீத விளையாட்டு' என்று.

"அன்று இந்தியைப் புகுத்தி அதன் ஆட்சியைப் பலப்படுத்த ஆச்சாரியார் தாளமுத்துவையும் நடராசனையும் சவமாக்கினார்; ஆனால் இன்று அதே ஆச்சாரியார் இந்தி கூடாதென்று கூட்டறிக்கை விடுக்கின்றார், இது யார் செய்த வேலை? நம் தியாகம்... ஆம் நம் தியாகம்தான் ஆச்சாரியாரைத் திருத்தியிருக்கிறது. எனவே நம் கொள்கையிலே கோணலில்லை என்பது புலனாகிவிட்டது. எனவே தோழர்களே, தாய்மார்களே மொழிகாக்க வழி காணுவோம் வாரீர் என்றழைக்கின்றேன். இந்த மாநாடு நல்ல முடிவு தரும் என்றும், அந்த முடிவு ஆணவக்காரர்களுக்கு ஓர் அபாய அறிவிப்பாக அமையும் என்றும் நம்புகிறோம்.

"இந்த நேரத்தில் இம்மாநாட்டிற்கு சுவாமி அருணகிரிநாதர் அவர்கள் தலைமை தாங்க இசைந்துள்ளது ஒரு நல்ல அறிகுறியாகும். ஆசசாரியார் ஆட்சியில் இந்தி இந்த நாட்டில் புகுந்த நேரத்தில், போர்க்கொடி ஏந்திய தமிழர்களுக்குத் தலைமைதாங்கி, இந்தியை ஓட, ஓடவிரட்டியவர், இம்முறையும் அத்தகைய பணிபுரிய வந்துள்ளது — நமெக்கெல்லாம் பெருமை அளிக்கக்கூடியது. அவரை இம்மாநாட்டின் சார்பாக வருக, வருக என வரவேற்கின்றேன்!

"காஞ்சி தந்த செல்வம்—பொதுவாழ்வே தன்வாழ்வெனக் கொண்ட திரு. சி. வி. எம். அண்ணாமலை அவர்கள் இம்மாநாட்டைத் திறந்து வைப்பது சாலச் சிறந்ததாகும். சொந்த மொழிக்கு ஆபத்துச் சூழ்ந்த நேரத்தில், 'தமிழ் வாழ்க! இந்தி ஒழிக' என எக்காளமிட்டுச் சிறை புகுந்த செம்மலே வருக! வருக! என அவரையும், மாநாட்டில் பங்குபெற பல பாகங்களிலிருந்தும் வந்துள்ள பிரதிநிதிகளே! தாய்மார்களே! தோழர்களே! உங்களை அனைவரையும், வரவேற்புக் குழுவின் சார்பில் வருக, வருக என வரவேற்கிறேன்"

22—9—57 அன்று திருவண்ணாமலையில் நடைபெற்ற வ. ஆ. மாவட்ட தி. மு. க. 3-வது மாநாட்டின்போது வரவேற்புக் குழு தலைவர் தோழர் முல்லை-சக்தி அவர்கள் ஆற்றிய வரவேற்புரை :—

"அண்ணா அவர்களே! பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் அவர்களே! கழக முன்னணி வீரர்களே! திரள், திரளாக இங்கே கூடியிருக்கும் தீரமிகு தோழர்களே! மாநாட்டின் பிரதிநிதிகளே! தாய்மார்களே! உங்களனைவரையும், மாநாட்டின் வரவேற்புக் குழுவின் சார்பில் வருக, வருக என இதயமெல்லாம் பூரிக்க வரவேற்கிறேன்.

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாடிவீடாம் வடாற்காடு மாவட்டம் உங்களனைவரையும் வரவேற்பதில் பெருமை கொள்ளுகிறது!

"வடாற்காடு மாவட்டம் இயக்க வரலாற்றில் தக்கதோர் இடம் பெற்றிருக்கும் பெருமையை நான் சொல்லத்தேவை இல்லை! வடாற்காடு நமது இயக்கத்திற்குப் பெருமை தேடித் தந்ததில் எந்த மாவட்டத்திற்கும் பின்வாங்கியதில்லை!

"போர் என்றால் முகஞ்சுளிப்போரும், சிறையென்றால் சிந்தை நொந்திடும் பேதைகளும் இம்மாவட்டத்தில் இல்லை. தலைவர்களின் வழி, வழியே நடந்து கொள்கையிலிருந்து இம்மியும் பிறழாது—குருதிசொட்டவேண்டிய நேரத்தில் குருதியைக் கொட்டி—காணிக்கை செலுத்த வேண்டிய நேரத்தில் காணிக்கை செலுத்தி, ஏறுநடைபோடும் மாவட்டம் வடாற்காடு. தி. மு. க.-வின் கோட்டை என மாற்றாரும், போற்றும் மாவட்டம். நல்லவர் உள்ளமெல்லாம் வாழ்த்தும் மாவட்டம். இந்த மாவட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் செல்வாக்குப் பரவுவதைக்கண்டு இழிமொழி பேசுவோரும், சுடுசொல் வீசுவோரும் கேலி மொழியையும், கிண்டல் வார்த்தைகளையும் உமிழ்வோரும், இருட்டடிப்புச் செய்வோரும் உண்டு. என்றாலும், அவைகளை துச்சமென மதித்து, என்கடன் பணிசெய்து கிடப்பதே என்ற தாரக மந்திரத்தை உச்சரித்துக் கொண்டே விடுதலைப் பயணத்தை நடத்தும் எண்ணற்ற எஃகுத் தொண்டர்களைகொண்ட மாவட்டம். கருமேகம் மறைத்தாலும், கதிரவன் ஒளி குன்றாததைப் போலவே வடாற்காடு மாவட்டத்தின் பெருமையை நாடு உணர்ந்திருக்கிறது! நல்லவர் உள்ளத்தை எல்லாம் கவர்ந்திருக்கிறது! அத்தகைய சீரும் சிறப்பும் கொண்ட மாவட்டத்தின் மாநாட்டிற்கு வந்திருக்கும் உங்களனைவரையும் வரவேற்கின்றேன் இதயமாற!

"கட்சி இட்ட கட்டளையைச் சிரமேற்தாங்கி தொல்லைகள் பல சூழ்ந்தாலும், எடுத்த பணியை விடாது மாற்றார்களின் சுடுசொல் சுளீரென கொட்டினாலும் அதைகவனியாது தாயகப்பணியே தலையாய பணியென நிலைகுலையாது பாடுபடும் தோழர்கள் இந்த மாவட்டத்தில் செல்வாக்குப் பெற்றிருப்பதில் ஆச்சரியமில்லை.

"அண்ணா தீட்டிய 'ஆரிய மாயை'யை இந்த சர்க்கார் தடை செய்தபோது இம்மாவட்டத்தில் உள்ள ..து கழகக் கண்மணிகள் பொதுமன்றத்தில் அந்த அறிவு விளக்கத்தைப் படித்து, பொடிப்பொடியாக்கினர் ஆளவந்தாரின் அடக்குமுறை தர்பாரை!

"ஆச்சாரியார் கொண்டுவந்த கல்வித் திட்டத்தை எதிர்த்ததுடன் இரயில்நிறுத்தப்போராட்டத்திலும், கல்லக்குடிப் போராட்டத்திலும் கணிசமான பங்கைப்பெற்ற மாவட்டம் வ. ஆ. மாவட்டம்! அதுமாத்திரமல்ல; அண்மையில் முடிந்த பொதுத்தேர்தலில் நான்கு சட்டமன்ற உறுப்பினர்களையும், ஒரு மக்கள் சபை உறுப்பினரையும் வழங்கிய பெருமை எங்களுக்குத்தான் உண்டு என்று சற்று கர்வத்தோடுகூட கூறுவேன்!

"அத்தகைய பெருமையைத் தேடிக்கொண்ட மாவட்டத்தின் மாநாடு இன்று திருவண்ணாமலையில் கூடுகிறது!

"திருவண்ணாமலை என்றதும் ஆஸ்திகர்களுக்கு அண்ணாமலையாரின் நினைவும், மதப்பித்தர்களுக்கு ரமணரின் நினைவும், நமது இயக்கத்தின் தோழர்களுக்கு 'தி. மு. க. கோட்டை' என்ற எண்ணமும்தான் எழும்.

"அண்ணாமலையார் அன்றுபோல் இன்றும் இங்கு வீற்றுதான் இருக்கிறார். ரமணாச்ரமம் தனது பெருமைகளைப் பாடிக்கொண்டுதான் இருக்கிறது! ஆனால் இன்று திருவண்ணாமலை திராவிடத்தின் விடுதலைப்பட்டாளத்தின் பாடிவீடென்பதை கடந்த பொதுத் தேர்தல் நிரூபித்து விட்டது! இந்தப் பகுதியில் இருவரை சட்டமன்றத்திற்கும் ஒருவரை மக்கள் மன்றத்திற்கும் அனுப்பிவைத்திருப்பதிலிருந்தே அது புரியும்! அது மாத்திரமல்ல இப்பகுதியில் சட்டசபை உறுப்பினராகத்தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நண்பர் ப. உ. சண்முகம் அவர்கள் ஏறத்தாழ இருபதினாயிரம் ஓட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி குடினாரென்றால் இப்பகுதி தி. மு. க.—வின் கோட்டை என்று கூறுவதில் தவறென்ன ?

"இத்தகைய பெருமைபெற்ற திருவண்ணாமலையில், மாவட்டத்தின் பெருமையை உயர்த்திய திருவண்ணாமலையில் இம்மாநாடு கூடுவது மிகப் பொருத்தமானது என்பதை நீங்கள் அறிவீர்கள்!

"இயக்க வரலாற்றில் வடாற்காடு, மாவட்டமும், திருவண்ணாமலையும் தக்கதோர் இடம்பெற்றிருப்பதைப்போலவே ஒரு சோக நிகழ்ச்சியையும் கொண்டுள்ளது என்பதை மறைக்கவோ மறுக்கவோ முடியாது! திராவிட இயக்கம் பிளவுபடவும், நாம் தோன்றுவதற்கும் காரணமாயிருந்த தலம் திருவண்ணாமலை. என்றாலும் கண்ணீரோடு பிறந்த நாம் இன்று நாட்டின் கண்மணிகளாகத் திகழ்கிறோம்! அன்று இயற்கை அன்னையின் கண்ணீரோடு நம் கண்ணீரையும் கலக்க விட்டு, நம் கழகத்தைத் துவக்கிய நேரத்தில் சுடுசொல் ஏசியோரும், கடுமொழி பகன்றோரும், அவசர ஆருடக்காரர்களும் கண்டு பெருமையையும், பொறாமையையும் கொள்ளுமளவிற்கு நாம் வளர்ந்திருக்கிறோம்! அத்தகைய வளர்ச்சிக்கு நாம் சிந்திய கண்ணீர், கொட்டிய குருதி—ஏராளம்! ஏராளம்! எத்தனை, எத்தனை எதிர்ப்புகள்! அத்தனையையும் உதறித்தள்ளி' கொண்ட கொள்கையிலே உறுதிகொண்டு இன்று நல்லோர் நம் நலம்பாடவும் செய்திருக்கிறோம். தாயக விடுதலைப் போரிலே பங்குபெற்று, சிறைச்சாலையை நிரப்பி, ஆளவந்தார் திகைக்கும்படி செய்திருக்கிறோம்! தோழர்கள் பலர் தங்களது உயிரையே பணயம் வைத்து இயக்கத்தை வலுவாக்கியிருக்கிறார்கள்!

"நேற்றுவரை மக்கள் மன்றங்களில் நாம் முழக்கி வந்த தாரக மந்திரமாம் திராவிட நாடு திராவிடருக்கே என்ற முழக்கத்தை, சட்டசபையிலும், முழங்க ஆரம்பித்திருப்பது இயக்க வாலாற்றில் ஒரு திருப்பு மையம்—பொன்னான கட்டம்! இன்று நாட்டில் நாம் ஒரு நல்ல எதிர்க்கட்சி என்பதை உணர்த்தியிருக்கிறோம்! நமது இலட்சிய கீதம் சட்டசபையிலும் பாராளுமன்றத்திலும் ஒலிக்க ஆரம்பித்துள்ளது. இவை நமது வெற்றிக்கு நல்ல அறிகுறிகளாகும்.

"இம்மாநாட்டிற்குத் தலைமை வகிக்கும் அம்பில் தர்மலிங்கம் திருச்சிதந்த திருவிளக்கு! நாட்டின் பெருங்குடும்பத்தில் தன்னையே பதியவைத்துக் கொண்டிருக்கும் அவர் இம்மாநாட்டிற்குத் தலைமை வகிப்பது எங்கள் மாவட்டத்திற்கு பெருமையாகும். அவரை வருக, வருக, என வரவேற்கிறேன்.

"மந்திரியாரின் கொட்டத்தை பொதுத் தேர்தலில் அடக்கிய நண்பர் கிருஷ்ணமூர்த்தி மாநாட்டின் திறப்பாளர்! அந்தச் சீயத்தை வருக! வருக! என வரவேற்கிறேன்!

"மொழியை காத்திடவும், தாயகத்தை மீட்டிடவும் கூடியுள்ள தோழர்களே! உங்களனைவரையும் வாரீர்! வாரீர் என வரவேற்கிறேன்!"

'பாரத மாதா'

நேரு கற்பிக்கும் புதிய பாடம்

ஐதராபாத், செப். 24—

'பாரத மாதா' என்பது யார் என்று பண்டித நேரு பஞ்சாபியரைக் கேட்டாராம்; அவர்கள் விழித்தனராம்!

பிறகு நேருவே இவ்வாறு கூறினாராம்—'நீங்களும், நானும் இந்திய மக்களும்தான்' என்றாராம்!

அறவழியில் அமைதி நிலவ அமைச்சர்கள்!

மதுரை, செப். 25—

சென்னை மாநிலத்தில் இராமநாதபுரம் பகுதிகளில் நடைபெற்றுவரும் சாதிச் சண்டையை அமைச்சர்கள் அறவழி நின்று அமைதியைக் காண முற்பட்டுள்ளனர்.

போலீஸ் அமைச்சர் திரு. பக்தவத்சலமும், நிதி அமைச்சர் திரு. சுப்பிரமணியமும் கலகம் நடைபெற்றப் பகுதிகளை நேரில் காண சென்றுள்ளனர். அங்கிருந்து திரும்பியதும், முதலமைச்சர் திரு. காமராசருடன் கலந்துபேசி ஆவன செய்வார்கள் என்று தெரியவருகிறது.

கடந்த மூன்று நாட்களாக சாதிச் சண்டை தணிந்துள்ளது என்றும், இதுவரை 450 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரியவருகிறது.

அசாமில் எண்ணெய்த் தொழிற்சாலை

கிளர்ச்சியை தீவிரப்படுத்த திட்டம்

கௌகாங், செப். 22—

உத்தேச எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையை அசாமில் நிறுவ வேண்டுமெனக் கோருவதற்காகக் கிளர்ச்சியைத் தீவிரப்படுத்துவது என்று, அகில அசாம் எண்ணெய்த் தொழிற்சாலை செயற்குழு முடிவு எடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

தோழர்களுக்கு வேண்டுகோள்

★

அஞ்சல் உறையின் பழய கட்டணத் தொகையான 13 புதுக்காசுகளுக்குரிய அஞ்சல் வில்லை மட்டுமே கடிதம் எழுதும் தோழர்கள் ஒட்டி அனுப்பிவிடுகின்றனர்; இது போல் வரும் கடிதங்களுக்கு நாள்தோறும் அதிகப்படியான அஞ்சல் கட்டணம் செலுத்திப் பெறவேண்டியதாகி விடுகிறது.

18—9—57-ம் நாளிலிருந்து அஞ்சல் கட்டண விதிகளில் மாற்றம் ஏற்பட்டு அஞ்சல் உறைக்கான கட்டணம் **15 புதுக் காசுகளாக உயர்த்தப்பட்டிருக்கிறதென்பதைத் தோழர்களுக்கு** நினைவூட்டுவதுடன், அந்த விகிதத்திலேயே அஞ்சல் வில்லைகளை ஒட்டி அனுப்ப வேண்டுகிறோம்.

—நிர்வாகி: 'நம் நாடு'

இந்தி எதிர்ப்பு மாநாட்டில் அண்ணா

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பேசித் தீர்மானிக்கப்பட்டதில் யார் யார் கையொப்பமிட்டிருக்கின்றார்கள் என்ற பட்டியலை மட்டும் உங்களிடத்திலே படிக்கின்றேன். ஏன் நான் இந்தப் பட்டியலைப் படிக்கின்றேன் என்றால், இந்தப் பட்டியலுக்கு வெளியே இருக்கின்ற அரசியல் கட்சித் தலைவர்கள் யாருமில்லை. இந்தப் பட்டியலுக்கு அப்பாற்பட்ட அறிவாளிகள் அதிகம்பேர் நாட்டிலே இருக்கமுடியாது. இந்தப் பட்டியலிலே உட்பட்டிருக்கின்ற பெயர்கள் அத்தனையும் தனிப்பட்டமுறையிலேயும் சிறந்தவர்கள்; சிலர் குறிப்பிட்ட சில இயக்கங்களுக்குக் கர்த்தாக்களாகவும் தலைவர்களாகவும் நடத்திச் செல்பவர்கள். இவர்களெல்லாம் எதிர்க்கின்றார்கள்: 1956-ல் என்பதை, உங்களுக்குக் கவனப்படுத்த அந்தப் பட்டியலைப் படிக்கின்றேன். முதலிலே கையெழுத்திட்டவரும் இந்த வாசகத்தை எழுதியவரும் ஆச்சாரியார் அவர்களாவார்.

"இரண்டாவதாகக் கையெழுத்திட்டவர் ஈ. வெ. இராமசாமி பெரியார்—திராவிடர் கழகத் தலைவர்.

"பி. டி. இராசன்-ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்.

"இராஜா சர் முத்தையா செட்டியார்-அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு சான்சலராக இருந்துவருபவர்.

அடுத்தபடி நான், நெடுஞ்செழியன்—தி. மு. கழகப் பொதுச் செயலாளர்.

"திராவிட பார்லிமெண்டரி கட்சித் தலைவர் சயம்பிரகாசம்.

"எஸ். ஜி. மணவாள இராமானுசம்—அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே துணைவேந்தராக இருந்தவர்.

"டி. எம். கிருஷ்ணசாமி அய்யர் — திருவாங்கூர் - கோச்சியிலே பிரதம நீதிபதியாகப் பணியாற்றியவர்.

"இவர்களெல்லாம்கூட சாதாரணமாக இருக்கும்; இப்போது படிக்கின்ற பெயர் உங்களுக்கு நம்பிக்கையூட்டுவதாக இருக்கும்.

"ம. பொ. சிவஞான கிராமணியார்-தமிழரசுக் கழகத் தலைவர்.

"ஆ. இரத்தினம்-தாழ்த்தப்பட்டோர் பெடரேஷனைச் சேர்ந்தவர்.

"எஸ். ஆர். வெங்கட்ராமன்-'சர்வண்ட்ஸ் ஆப் இந்தியா சொசைட்டி'யிலே செயலாளராக இருப்பவர்.

"கி. ஆ. பெ. விசுவநாதம்-தமிழ்ப் பேரவைச் செயலாளர்.

"பேராசிரியர் இரா. பி. சேதுப்பிள்ளை-சென்னைப் பல்கலைக் கழகம்.

"டாக்டர் எம். வரதராசன்-பச்சையப்பன் கல்லூரியிலே பேராசிரியராக இருப்பவரும், இன்றையத்தினம் சர்க்காரிடத்திலே வீரச் சுதந்தரப் பதக்கம் பெற்றவருமான நம்முடைய ஈண்டர் அவர்கள்.

"மற்றொருவர் வி. எஸ். தியாகராச முதலியார்-திருவாரூரைச் சேர்ந்தவர்.

"எம். பி. சோமசுந்தரம்-'கல்கி' பத்திரிகைக்கு அந்த நாளிலே ஆசிரியராக இருந்தவர்.

"அமிர்த கணேச முதலியார்-செஞ்சலுவைச் சங்கத்திலே தலைவராக இருப்பவர்.

"டாக்டர் ஏ. சீனிவாசன்-எம். எல். சி.-யாக இருந்தவர்.

"ஏ. சுப்பையா இசைக் கூட்டுடையார்.

"நான் இப்போது கேட்கிறேன்—இவர்களையெல்லாம் நீக்கிவிட்டு, நீங்கள் எந்தத் தலைவர்களைக் காட்டி இந்தியைப் புகுத்தப் போகிறீர்கள். இவர்கள் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட கருத்துக்குச் சொந்தக்காரர்கள். ஒரு குறிப்பிட்ட இயக்கத்தை நடத்திச் செல்லக்கூடியவர்கள். ஒவ்வொருவர் பின்னாலேயும் பல இலட்ச மக்கள் இருக்கிறார்கள் என்றால்—வேண்டுமானால் ஒவ்வொருவருக்கும் 'உன் பக்கத்திலே அதிக ஆளா, என் பக்கத்திலே அதிக ஆளா'—இதிலே தகராறு இருக்குமேதவிர, தமிழ்நாட்டிலே உள்ள அறிவுபடைத்த அரசியல் வாதிகள் அத்தனைபேரும் இவர்களிலே யார் பக்கத்திலாவது இருக்கின்றார்கள். இவர்கள் அத்தனைபேரும் சேர்ந்து 1956-லே இந்தி தேவையில்லை என்ற தீர்மானத்தை நிறைவேற்றி எந்த சேர் கமிட்டி இன்றையத்தினம் அறிக்கை வெளியிட்டிருக்கின்றதோ அவருக்கே அனுப்பினார்கள். அந்த சேர் கமிட்டியிலே இருக்கின்ற அறிக்கையைப் படித்தால் இப்படி ஒரு மனு வந்ததாகக்கூட ஒரு குறிப்பு இல்லை. இந்த அரசியல் அறிக்கு நாட்டை ஆளுகின்றவர்கள் என்ன பதில் அளிக்கின்றார்கள்?

"நிதி அமைச்சர் சுப்பிரமணியம் மெத்த ஆத்திரத்தோடு சட்டசபையிலே பேசுகின்றார், 'உணர்ச்சி வயப்பட்டு அண்ணாதுரை பேசினால் போதாது; ஆதாரத்தோடு பேசவேண்டும்' என்று! இதோ அந்தக்ஹும் அறிந்துகொள்ளக் கூடிய ஆதாரம். அமைச்சர் இதற்கு என்ன பதிலளிக்கிறார்? இத்தனை பெரிய அரசியல் தலைவர்களும் இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் ஒருவருக்கொருவர்,—கோயிலிலிருக்கிற நவக்கிரமாவது ஒன்றையொன்று பார்க்கும். இதிலேயுள்ளவர்கள் ஒருவரையொருவர் திரும்பிப் பார்க்கமாட்டார்கள் — அப்படிப்பட்ட அத்தனைப்பேரும் இந்த ஒரு விஷயத்திலே ஒன்றாகக்கூடி, இந்தி வேண்டாமென்று உனக்கு அனுப்பினால், அதற்கு அளிக்கப்பட்ட பதில் என்ன, மதிப்பு என்ன என்றால், அந்த அறிக்கையிலே இதைப் பற்றி ஒரு குறிப்பு மில்லை. குறிப்பு இல்லாதது மட்டுமல்ல; இந்தியை யாருமே எதிர்க்கவில்லை யென்று சேர் அவர்களே ஒரு கூட்டத்தில் சொன்னார்.

"அவர் அந்தக் கூட்டத்திலே சொன்னதை இந்த இயக்கக்காரர்கள்—இந்த அறிக்கையைத் தயாரித்தவர்கள் உடனே மறுத்து, அவருக்குக் கடிதமெழுதினார்கள். கடிதமெழுதியதற்கு அவர் என்ன சொன்னாரென்றால், பொதுவாக மக்கள் எதிர்க்கவில்லை' என்றார். இவர்களுக்குப் பின்னேயிருப்பவர்களெல்லாம் யார்?

"இராசகோபாலாச்சாரி பின்னாலே சாதாரணமாக வரிப் புலிகளும், ஈ. வெ. இராமசாமிப் பெரியார் பின்னாலே கரடிகளும், பி. டி. இராசன் பின்னாலே ஓநாய்களும் இராஜா சர் முத்தைய செட்டியார் பின்னாலே பிணந்தின்னி கழுகுகளும், என் பின்னாலே அப்பாவிகளும், சுற்றிக்கொண்டிருப்பதாகவா சேர் கருதுகின்றார்? இவர்களுக்கெல்லாம் மக்கள் கட்டுப்படவில்லை என்றால், மக்களைக் கட்டுப்படுத்தக் கூடிய சக்தியைக் காட்டு. காட்டுவதற்கு வக்கு எங்கேயிருக்கின்றது; வழி எங்கேயிருக்கின்றது?

"இவை யத்தனையையும் குப்பைக் கூடையில் தூக்கிப் போட்டு விட்டுத்தான், சேர் கமிட்டியிலே-இன்றையத்தினம் அறிக்கையிலே இந்தியைத் திணிக்கவேண்டும் என்று தீர்மானித்திருக்கிறார்கள்.

"இனி நாம் தீர்மானிக்க வேண்டியதெல்லாம் தமிழ் மொழி இலக்கியமானதா? அல்லவா? அதைப் பற்றிய ஆராய்ச்சி உரைகள்கூட நமக்கு அதிகம் தேவையில்லை. யார் இந்தி மொழியைத் திணிக்கவிரும்புகின்றார்கள்? என்பதும், யார் பேரிலே திணிக்கவிரும்புகிறார்கள் என்பதும், எந்த நேரத்திலே திணிக்க விரும்புகிறார்கள் என்பதும், என்ன காரணத்தைச் சொல்லி திணிக்கவிரும்புகிறார்கள் என்பதும், நாம் கண்டுபிடித்தாகவேண்டும்.

"நள்ளிரவிலே, 12-1 மணிக்கு திடீரென்று நெருக்கதவை யாராவது தட்டினால் திடீரென்று திறந்துவிடுவோம்? கதவைத் திறக்காமலே உள்பக்கத்திலே இருந்துகொண்டு, 'யார் கதவைத் தட்டுவது?'-நான்தான், கதவைத் திற'—நான்தான் என்றால் கதவைத் திறக்கமாட்டேன், யார்? சொல்லு'—'தெரியவில்லை? நான்தான்'—'தெரியவில்லை, யார்? சொல்லு' 'குரலைப் பார்த்தால் தெரியவில்லையா?' — 'தெரியவில்லை சொல்லு' 'அட, நான்தான் ஆறுமுகம்!'—உடனேயே திறக்கமாட்டார்கள் புகமுள்ள பெண்கள். கொஞ்சம் கதவைத் திறந்து, ஓரத்திலே எட்டிப் பார்த்து, 'ஆறுமுகம்தானா என்று பார்த்துத்தான் உள்ளேவிடுவார்களே தவிர கதவு தட்டிய உடனே கதவைத் திறப்பார்களா? சில விடுகளை திறக்கப்படும்! நல்ல விடுகள் திறக்கப்படாது.

"ஆகையினாலேதான் ஒரு மொழி இந்த நாட்டுக்குள்ளே வருகின்றதென்றால், அது எந்த நாட்டுக்குள்ளே வருகின்றது; எந்த நாட்டிலேயிருந்து வருகின்றது? எந்த நேரத்திலே வருகின்றது? என்ன சொல்லிக்கொண்டு வருகின்றது?—இவைகள் நமக்கு விளக்கப்படவேண்டும். இவைகள் விளக்கப்படுவதற்கு நாட்டை ஆளுகின்ற காங்கிரஸ் அமைச்சர்கள், இன்றையத் தினம் சொல்லுகின்ற பதிலெல்லாம் 'இந்தியா ஒன்றாக இருக்கவேண்டுமே! இந்தியாவை ஒன்றுபடுத்த ஒரு மொழி வேண்டாமா?'—என்று சொல்லுகின்றார்கள்.

"நாம் அடிப்படையையே சந்தேகிக்கின்றோம். 'நீ, போடுகின்ற விசைக் குண்டிலே 40 பலம் இல்லை' என்று நான் சொன்னபின்பு, 2 குண்டு போட்டு '80 பலம்' என்று வாதாடி என்ன பயன்? நான் 'நீ, போடுகின்ற குண்டிலே 40 பலம் இல்லை' அது தேய்ந்து போய் 22 பலம்தான் இருக்கின்றது' என்கிறேன். 'இது விசைக்குண்டு என்று பெயர். ஆகையினால், 'ஒரு விசைதான் இருக்கும்' என்று என்னிடத்திலே வாதாடினால் என்ன பயன்? அதைப்போல 'இந்தியா ஒரு நாடல்ல'—என்று நாங்கள் வாதாடுகின்றோம். இந்தியா ஒரு நாடாக இருக்கத் தேவையில்லை என்பதற்கு ஆதாரம் காட்டுகின்றோம். இவைகளை மறுத்துப் பேசுவதற்கு முடியாமலும் பிரச்சினையைத் தீர்க்காமலும், இந்தப் பிரச்சினை அப்படியே விவாதத்திலேயிருக்கின்ற பொழுது எதற்காக இந்தியைப் புகுத்துவது?"

(தொடரும்)

புதிய நாடக அரங்கேற்று விழா

அழைப்பிதழ்

★

அன்புடையீர்! நிகழும் 28—9—57 சனிக்கிழமையன்று ஆத்தூர் ஸ்ரீநரன் டாக்கீசில் கலைஞர் மு. கருணாநிதி எம். எல். ஏ., அவர்கள் தலைமையில், இரவு 7½ மணிக்கும் 10½ மணிக்கும் நடைபெறும்

'நந்திவர்மன்' திரு. ப. கண்ணன் தீட்டிய பைந்தமிழ் வரலாற்று நாடகம்

அரங்கேற்று விழாவுக்குத் தாங்கள் வருகைதந்து சிறப்பிக்க வேண்டுமாய்க் கோருகிறேன்.

கவிதைகள்: நந்திக்கலம்பகம்; பாடல்கள்: 'அருணா'

வழிவிலை: ஆத்தூர், சேலம் மாவட்டம்

தங்களன்புள்ள கே. என். ரெத்தினம், உரிமையாளர்: ஸ்ரீ தேவி நாடக சபா

தென்னாற்காடுமாவட்ட

தி. மு. க. செயற்குழுக் கூட்டம்

29—9—57 காலை 10 மணிக்கு பண்ணுருட்டி இராஜாஜி தெரு, 11 எண்ணுள்ள இல்லத்தில் துணைப் பொதுச்செயலாளர் தோழர் என். வி. நடராசன் அவர்கள் தலைமையில் தென்னாற்காடு மாவட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

அதுபோது ஆய்வுக்கு வருபவை:—

1. தேர்தலுக்குப் பிறகு கழக வளர்ச்சிபற்றி ஆராய்தலும் புதுக் கழகங்களைப் பதிவு செய்தலும்,
2. தெ. ஆ. மாவட்ட தி. மு. கழக 3-வது மாநாட்டைக் கூட்டுவது பற்றி ஆராய்ந்து முடிவெடுத்தல் (இடம், காலம் முதலியன முடிவு செய்தல்),
3. செயலாளரால் கொண்டு வரப்படும் இதர தீர்மானங்கள்.

மாவட்டப் பிரதிநிதிகள் தவறுமல் வருகை தந்து கருத்துரை வழங்கும்படி தெ.ஆ.மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. கேட்டுக்கொள்கிறார்.

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

செப். 28: மாலை: திருவைகுண்டம்

இரவு: அனவரத நல்லூர்

29: மாலை: தூத்துக்குடி

30: மாலை: சித்தையன் கோட்டை

அக். 1: மாலை: ஆலங்குடி (தஞ்சை)

2: தாராசுரம்

ஸ்டர்லிங் நிலுவை குறைகிறது

பிரிட்டிஷ் பாங்கி விகிதம் ஏறியதின் விளைவு

புதுடில்லி, செப். 23—

கடந்த செப். 20-ந் தேதியுடன் முடிந்த ஒரு வாரத்தில் இந்தியாவின் ஸ்டர்லிங் நிலுவை ரூ. 15 கோடிவரை குறைந்துவிட்டதாம்.

வழக்கமாக வாரந்தோறும் ரூ 5 கோடிதான் குறையும் என்றும் பிரிட்டிஷ் பாங்கி விகிதம் ஏறிவிட்டதால் ரிசர்வ் பாங்கி தனது ஸ்டர்லிங் நிலுவையின் மதிப்பைக் குறைத்துக்கொள்ள நேரிட்டது என்றும், இதனால் ரூ 10 கோடி வரை ஸ்டர்லிங் நிலுவை குறைந்தது என்றும் கூறப்படுகிறது.

சென்னையில் நீங்கா தடை!

சென்னை, செப். 25—

போலீஸ் கமிஷனரின் முன் அனுமதியில்லாமல் கூட்டமோ, ஊர்வலமோ நடத்தக்கூடாது என்ற தடை உத்தரவு அக்டோபர் 9-ம் தேதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கழகக் கூட்டங்கள்

★

திருவைகுண்டம்

வ. உ. சி. திடலில்

(தி. மு. க. ஏழாம் ஆண்டு விழா)

28—9—57 மாலை 6 மணிக்கு

தலைவர்: டி. ஆர். சுப்பிரமணியன்

பேசுவோர்:

இரா. நெடுஞ்செழியன்

சு. இரத்தினவேல்பாண்டியன்

வ. செகவீர ராசேந்திரன்

இன்னிசை: அ. உலகநாதன்-மு. வ. முத்து குழுவினர்

(மாலை 4 மணிக்கு ஊர்வலம் உண்டு)

★

கோவை

லிங்கப்ப செட்டி வீதியில்

27—9—57 மாலை 6 மணிக்கு

பேசுபவர்: கி. மனோகரன்

கோவை 6-வது வட்டம்

புலியகுளத்தில்

28—9—57 மாலை 6 மணிக்கு

பேசுபவர்: கி. மனோகரன்

★

லால்குடி

சிவன்கோவில் முன்பு

28—9—57 மாலை 6 மணிக்கு

தலைவர்: வெ. ந. முத்தமிழ்ச்செல்வன்

பேசுவோர்:

க. அன்பழகன் எம்.எல்.ஏ.

அன்பில்-தர்மலிங்கம்

★

அனவரதநல்லூர்

திருவள்ளுவர் திடலில்

28—9—57 இரவு 8 மணிக்கு

தலைவர்: பி. பொருநைமீனன்

பேசுவோர்:

இரா. நெடுஞ்செழியன்

என். சங்கரலிங்கம்

★

தாசவநாய்க்கன்பட்டி

என். எஸ். கே. திடலில்

28—9—57 மாலை 5 மணிக்கு

தலைவர்: கே. எஸ்.எஸ்.பெரியார்

பேசுவோர்:

சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ.

வேலுச்சாமி

தாரைத்தம்பி

கே. வி. கே. சாமி நினைவு நாள் பொதுக்கூட்டம்

★

28—9—57 சனிக் கிழமை மாலை 6 மணிக்கு திருப்பூர் சருவம்பாளையம் வள்ளுவர் படிப்பகம், 16, 17-வது வட்ட தி. மு. கழகக் கிளைகள் சார்பில், கே. வி. கே சாமி நினைவுநாள் பொதுக் கூட்டம் தோழர் தி. ஆறுமுகம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் இரா. செகநாதன், ப. கிட்டப்பன். எ. கணேசன், ஜி. பெரியசாமி, சி. ஏ. பாலன் ஆகியோர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.